**உடுபத்தாவ பிரதேச சபை - 2023**
**-------------------------------------------------------**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

உடுபத்தாவ பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, உடுபத்தாவ பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளா் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு உள்நாட்டு கடன் அபிவிருத்தி நிதியத்தின் நிலுவை கடன் மீதி ரூபா 245,274 தொகை மிகையாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | 2024 நிதிக்கூற்றுக்களின் மூலம் சரி செய்யப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிர்மாண வேலைக் கடன்கொடுத்தோர் என ரூபா 19,355 | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | |
| (இ) | 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு களஞ்சிய இருப்பு மீதி ரூபா 122,007 தொகை மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஈ) | 2022 ஆண்டின் போது கொள்வனவு செய்திருந்த ரூபா 440,550 தொகை பெறுமதியான 18 அலுவலக உபகரணங்களும், ரூபா 134,775 தொகை பெறுமதியான 52 இயந்திர உபகரணங்களும் ரூபா 324,350 தொகை பெறுமதியான 43 தளபாடங்களும் ரூபா 48,000 தொகை பெறுமதியான மரம் வெட்டும் இயந்திரம் ஒன்றும் 2023 திசெம்பர் 31 திகதி அளவிலும் நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்திருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (உ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நூலக புத்தகக் கணிப்பீட்டு அறிக்கையின் படி அப்புறப்படுத்தப்பட்ட ரூபா 14,337 தொகை பெறுமதியான புத்தகங்களின் பெறுமதி நூலகப் புத்தகங்கள் கணக்குகளில் அட்டங்கியிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஊ) | மீளாய்வாண்டு வீதவரி வருமானம் ரூபா 111,080 தொகை குறைவாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ளது. | - மேற்படி - | - மேற்படி - |
| (எ) | ஹெல பொஜுன் ஹல கட்டிடம் மற்றும் கழிவறைச் செயற்திட்டத்தின் பெறுமதி ரூபா 202,387 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஏ) | மீளாய்வாண்டின் போது காணி மற்றும் கட்டிட அபிவிருத்திக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த செலவு ரூபா 1,877,452 தொகை மூலதனப்படுத்தியிருக்காததுடன், 04 காணிகளின் பெறுமதி ரூபா 195,000 தொகை கணக்குகளில் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஐ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி அளவில் சபையினால் 05 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்ததுடன், நிதிக் கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |

## 1.7 இணங்காமை

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டம் | | | |
| | பிரிவு 134 | சபையினால் அபிவிருத்தி செய்து சேவைகள் வழங்கும் பிரதேசத்தை முன்னேற்றப்பட்ட கிராமப் பிரதேசம் என வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். | குறிப்பிட்ட பிரிவின் அறிவுரையின் படி செயற்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| | நிதிப் பிரமாணங்கள் 570 மற்றும் 571 | ரூபா 4,144,874 இற்கான 179 காலவதியாகிய வைப்புக்கள் பிரமாணங்களுக்கு இணங்க ஆதவழிப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | - மேற்படி - | பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (இ) | பிரதேச சபை நிதி மற்றும் நிருவாக விதி | | | |
| (i) | விதி 33 | வீதவரி செலுத்துவதை புறக்கணிக்கும் நபர்கள் தொடர்பாக பட்டியலொன்று மற்றும் ஆதனங்களை தடை செய்யும் எழுத்தாணை ஒன்று ஒவ்வொரு காலாண்டு இறுதியிலும் வீதவரி எழுதுனரினால் தயாரிக்கப்பட்டு அதனை தலைவரின் கையொப்பத்திற்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு மேற்கொண்டிருக்கவில்லை. | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். | விதிக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ii) | விதி 218 | நியமனம் செய்யப்பட்ட சபையொன்றினால் வருடாந்த காணிகள் மற்றும் கட்டிடங்கள் தொடர்பான கணிப்பீடொன்று | - மேற்படி - | - மேற்படி - |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மேற்கொள்ளப்பட வேண்டியதுடன், அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஈ) | 2018 ஜனவரி 24 திகதிய 02/2018 கொண்ட பொது நிருவாகச் சுற்றறிக்கை | சுற்றறிக்கையின் 3,4,6.1,6.3,6.5 பிரிவுகளில் அடங்கியுள்ள ஏற்பாடுகளின் படி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | - மேற்படி - | சுற்றறிக்கை இணங்க செயற்பட வேண்டும். |
| (உ) | 2010 ஜூலை 30 திகதிய உள்ளூராட்சி திணைக்களச் சுற்றறிக்கையின் பிரிவு 1.2. ii. | விடயங்களை மாற்றும் முறைமை மற்றும் அவ்வாறு மேற்கொள்ளல் வசதியீனமான உத்தியோகத்தர்களுக்கான 02 வருடங்களுக்கு ஒருமுறை பிரிவு மாற்றும் முறையொன்று செயற்படுத்த வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு செயற்படுத்தியிருக்கவில்லை. | - மேற்படி - | சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி 2023 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையில் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 27,529,105 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 19,816,376 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | வருமான மூலம் | ஆண்டு 2023 | | | | ஆண்டு 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| i. | வீதவரி மற்றும் வரி | 4810 | 4203 | 3,770 | 4,334 | 3,624 | 2,297 | 1,402 | 4,292 |
| ii. | வாடகை | 14,088 | 9,615 | 15,024 | 404 | 3,563 | 12,138 | 6,646 | 1,203 |
| iii. | அனுமதிப் பத்திரக் கட்டணம் | 1,391 | 860 | 860 | 0 | 1,263 | 874 | 874 | 0 |
| iv. | ஏனைய வருமானங்கள் | 158,389 | 16,197 | 86,925 | 86,764 | 1,125,141 | 120,233 | 639 | 100,621 |
| | மொத்தம் | 178,678 | 30,875 | 106,579 | 91,502 | 1,133,591 | 135,542 | 9,561 | 106,116 |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காணப்பட்ட நிலுவை வீதவரி மீதி ரூபா 3,856,189 தொகையில் ஏக்கர் வரி ரூபா 78,029 தொகையும் காணப்பட்டது. | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன் என. | நிலுவை வருமானம் சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலுவை வாடகை ரூபா 388,765 தொகை, கடை வாடகை ரூபா 3,975 தொகை மற்றும் நடமாடும் குடில் நிலுவை வாடகை ரூபா 11,700 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. | - மேற்படி - | நிலுவை மீதி விரைவாக அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய நிலுவை முத்திரைக் கட்டணம் ரூபா 7,952,313 இற்கான மீதியில் ஆண்டிற்கான ரூபா 7,270,839 தொகையும் 2016 மற்றும் 2021 ஆண்டுகளுக்குரிய ரூபா 681,474 தொகையும் காணப்பட்டது. 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெறவேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 75,630,224 தொகையாக இருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஈ) | வீதவரி கட்டணம் அறவீடு செய்வதற்காக 05 வருடங்களுக்கு ஒருமுறை பெறுமதி மதிப்பீடு செய்து அதன் அடிப்படையில் கட்டணம் அறவீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் சபையினால் அவ்வாறு செய்திருக்கவில்லை. | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன் என. | வீதவரிக் கட்டணம் அறவீடு செய்யும் ஆதனங்களுக்காக 05 வருடங்களுக்கு ஒருமுறை பெறுமதி மதிப்பீடு செய்து அதன் அடிப்படையில் கட்டணம் அறவிடப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தின் மூலம் சாட்டப்பட்டுள்ள கருமங்கள் நிறைவேற்றுதல்

| | கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பிரதேச சபை அதிகார சட்டத்தின் பிரிவு 126 இன் கீழ் 03 விடயங்களுக்காக துணைச் சட்டங்கள் தயாரிக்கப்பட்டு 2020 ஆண்டின் உள்ளூராட்சித் திணைக்களத்திற்கு | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன் என. | சட்டத்தின் 126 பிரிவிற்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அனுப்பப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டு இறுதி அளவிலும் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவத்திற்காக மூலதனச் செலவு ரூபா 534,000 தொகை மற்றும் மீண்டுவரும் செலவு ரூபா 24,259,371 தொகை மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், குப்பை விற்பனையின் மூலம் கிடைத்திருந்த வருமானம் ரூபா 472,934 தொகையாக காணப்பட்டது. | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன் என. | உக்கக்கூடிய மற்றும் உக்காத குப்பைகளை உரிய முறையில் முகாமைத்துவம் செய்து வருமானம் உருவாக்கும் அலுவல்களை மேம்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.2 முகாமைத்துவ திறமையின்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 08 பெற வேண்டிய கணக்குகளின் பெறுமதி ரூபா 91,113,609 தொகை காணப்பட்டது. | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன் என. | சபைக்கு அறவிடப்பட வேண்டிய மீதிகளை விரைவாக அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய 04 கணக்கு மீதிகளின் கூட்டுப் பெறுமதி ரூபா 20,751,241 தொகையாக இருந்தது. | - மேற்படி - | செலுத்த வேண்டிய மீதிகளை முறைப் பிரகாரம் விரைவாக தீர்க்க வேண்டும். |
| (இ) | 03 ஊழியர்களிடம் இருந்து அறவிடப்படாமல் கடன் மீதி ரூபா 369,460 தொகையாகும். | - மேற்படி - | ஊழியர் கடன் உரிய முறையில் அறவிடப்பட வேண்டும். |

**3.3 விளைவற்ற மற்றும் குறைபயன்பாட்டு ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபைக்குச் சொந்தமான நோய் காவு வண்டி திருத்த வேலை மேற்கொள்ளப்படாமல் 02 வருடங்களுக்கு மிகையான காலம் முதல் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது. | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன் என. | விளைவற்ற சொத்துக்களை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சொத்துக்களின் பெறுமதிகள் கால ரீதியாக மீள்மதிப்பீடு செய்யாமையின் காரணமாக ரூபா 50, ரூபா 100 போன்ற | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன் என. | நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளதுவரை |

| | | | |
|---|---|---|---|
| | குறைந்த பெறுமதிகளுடைய காணிச் சொத்துக்கள் காணப்பட்டது. | | ஆக்கப்பட்டு பேணப்பட வேண்டும். |
| (ஆ) | தளபாடங்கள் மற்றும் உபகரணங்களுக்காக நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்பட்டு வந்திருக்காததுடன், வாகனங்கள், இயந்திரங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களுக்கான சொத்துக்கள் பதிவேடு நாளதுவரை ஆக்கியிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | சபையினால் பயன்படுத்தப்பட்டு வருகின்ற 02 வாகனங்கள், 31 மயானங்கள் மற்றும் 05 விளையாட்டுத் திடல்களின் உரிமையை சபைக்கு உரித்தாக்கியிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |

**3.5 மனித வள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 16 மிகைப் பதவிகள் காணப்பட்டன. | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன் என. | பதவியணியின் தேவைப்பாடுகள் கால ரீதியாக மீளாய்வு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை மிகைத்து அமைய, பிரதியீட்டு, ஒப்பந்த மற்றும் நாளாந்த சம்பள அடிப்படையில் சேர்க்கப்பட்டிருந்த 19 ஊழியர்களுக்காக மீளாய்வாண்டின் போது சம்பளம் மற்றும் படியாக ரூபா 26,457,889 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |

**4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையினால் மீளாய்வாண்டு தொடர்பாக நிறைவேற்றப்பட வேண்டிய பணிகள் அடங்கிய செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், அங்கு இனங்கண்டிருந்த விஷேட சுட்டிகளை அளவீடு செய்யக்கூடிய யதார்த்தமான அடிப்படை ஒன்று பயன்படுத்தப்பட்டு மீளாய்வாண்டிற்குரிய செயல் நடவடிக்கைத் திட்டத்தின் முன்னேற்றத்தை மதிப்பாய்வு செய்திருக்கவில்லை. | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன் என. | மீளாய்வாண்டிற்குரிய செயல் நடவடிக்கைத் திட்டத்தின் முன்னேற்றம் மதிப்பாய்வு செய்யப்பட வேண்டும். |

### 4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 05 வருமான விடயங்களில் மதிப்பீட்டு மற்றும் உள்ளவாறான வருமானங்கள் இடையே 21 சதவீதம் முதல் 95 சதவீதம் வரையும், 06 செலவு விடயங்களில் மதிப்பீட்டு ஏற்பாடுகள் மற்றும் உள்ளவாறான செலவுகள் இடையே 25 சதவீதத்தை விட கூடிய முரண்கள் காணப்பட்டது. | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன் என. | வருமான மதிப்பீடு கூடியளவு யதார்த்தமாக தயாரிக்கப்பட வேண்டும். |

### 4.3 நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை நெருங்குவதற்காக மீளாய்வாண்டின் போது நிறைவேற்றுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த 04 தொழில்பாடுகளின் முன்னேற்றம் 50 சதவீதத்தை விட குறைவான மட்டத்தில் காணப்பட்டது. | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன் என. | நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளை இனங்கண்டு அவற்றை நெருங்க வேண்டும். |